**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி**

**முன்னிலை: திரு.எஸ்.வடிவேல், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவிநாசி**

**2024 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 10–ஆம், நாள் புதன்கிழமை**
**CNR No.TNTI12-000134-2016**

**இடைநிலை மனு எண்.07/2023**
**இன்**
**அசல் வழக்கு எண்.124/2016**

1.சு.லோகநாதன்

2.சின்னமுத்து

... மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

**.. எதிர் ..**

து.கணேசன்

...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இறுதியாக 03.01.2024ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.சி.ராஜாராகவன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஏ.சின்னசாமி அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்ய ஏற்பட்ட

காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 8 விதி 1ஏ(3)–ன்படி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு உரையின் சுருக்கம்:–</u>

மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் என்றும், எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு எதிராக விளம்புகை மற்றும் சுவாதீனம் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் தற்போது தான் மனுதாரர்களுக்கு கிடைக்கப்பெற்றதாகவும், மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு காலதாமதம் ஏற்பட்டுவிட்டதாகவும், காலதாமதமானது வேண்டுமென்றோ அஜாக்கிரதையினாலோ ஏற்பட்டதல்ல என்றும், காலதாமதத்தை மன்னித்து ஆவணங்களை தாக்கல் செய்வது அவசியம் என்றும், இல்லை என்றால் மனுதாரருக்கு மிகுந்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>

மனு பொய் என்றும், சட்டப்படி நிலைக்கதக்கது அல்ல என்றும், மனுவில் கூறியுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூப்பிக்க வேண்டும் என்றும், மனுதாரர்கள் தாக்கல்

செய்துள்ள தூய அடங்கல் பதிவேடு மற்றும் சிட்டா ஆகியவை ஏற்கனவே வருவாய்த்துறை அதிகாரிகளால் ரத்து செய்யப்பட்டுவிட்ட ஆவணங்கள் என்றும், மனுதாரர்கள் ஒப்புவித்துள்ள வீட்டுவரி இரசீதுகள், தொழில்வரி இரசீதுகள், மின் இணைப்பு இரசீதுகள் அனைத்தும் தாவாவிற்கு பின்னிட்ட ஆவணங்கள் என்றும், மனுதாரர்கள் பிரமாண வாக்குமூலத்தில் ஆவணங்களை தாக்கல் செய்ததிற்குண்டான காலதாமதத்தை மன்னிக்கக்கோரி கூறியுள்ள காரணங்கள் சட்டப்படியும், நியாயப்படியும் ஏற்றுக்கொள்ளக்கூடியவை அல்ல என்றும், மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டப்பட்டுள்ளது.

4) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டுள்ளது. இரு தரப்பிலும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. வழக்கு கோப்புகளை கவனமாக பரிசீலனை செய்து கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**5) <u>இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா இல்லையா? என்பதே தீர்மாணிக்கப்பட வேண்டிய விஷியமாகும்:–</u>**

5.1.) இம்மனுவின் தரப்பினர்களை அசல் வழக்கின் வரிசைக்கு இணங்க மனுதாரர்களை பிரதிவாதிகள் என்றும், எதிர்மனுதாரரை வாதி என்றும் குறித்து உரைக்கப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கானது விளம்புகை மற்றும் சுவாதீனம் பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி தொடர்ந்துள்ளார்.

5.2.) மனு மற்றும் எதிருரையை கவனமாக பரிசீலித்து கருத்தில்

கொண்டுள்ள சூழ்நிலையில் கட்டளை 8 விதி 1ஏ(3)–ன் சட்டவகைமுறையை குறிப்பிட்டு கூறுவது அவசியமானதாகும்.

ORDER 8 RULE 1A OF CPC

1A. Duty of defendant to produce documents upon which relief is claimed or relied upon by him.-

(1) Where the defendant bases his defence upon a document or relies upon any document in his possession or power, in support of his defence or claim for set off or counter claim, he shall enter such document in a list, and shall produce it in court when the written statement is presented by him and shall, at the same time, deliver the document and a copy thereof, to be filed with the written statement.

(2) Where any such document is not in the possession or power of the defendant, he shall, wherever possible, state in whose possession or power it is.

(3) A document which ought to be produced in Court by the defendant under this rule, but, is not so produced shall not, without the leave of the Court, be received in evidence on his behalf at the hearing of the suit.

(4) Nothing in this rule shall apply to documents—

(a) Produced for the cross-examination of the plaintiff's witnesses, or
(b) Handed over to a witness merely to refresh his memory.

5.3.) மேற்கண்ட சட்ட வகைமுறைப்படி எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யப்படாத ஆவணங்களை நீதிமன்ற அனுமதியுடன் காலதாமதத்திற்கான காரணத்தை குறிப்பிட்டு கட்டளை 8 விதி 1ஏ(3)–ன்படி தாக்கல் செய்யலாம் என்பதை அறியமுடிகிறது. பிரதிவாதிக்கு தற்போது தான் மனு ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதாகவும், அதனை காலதாமதமாக தாக்கல் செய்வதை மண்ணித்து குறியீடு செய்ய அனுமதி வேண்டி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு வீட்டு வரி ரசீதுகள், தொழில் வரி ரசீதுகள், மின் இணைப்பு ரசீதுகள் ஆகியவை வழக்கிற்கு

பின்னிட்ட ஆவணங்கள் என்றும், வருவாய் துறை அதிகாரிகளால் ரத்து செய்யப்பட்ட தூய அடங்கல் பதிவேடு மற்றும் சிட்டா ஆகியவை தாக்கல் செய்யப்படுவதால் மேற்கண்ட ஆவணங்கள் ஒரு சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று வாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. தூய அடங்கல் பதிவேடு மற்றும் சிட்டா ஆவணங்கள் வருவாய்துறையினரால் ரத்து செய்யப்பட்டு இருப்பதை ஆட்சேபணைகளுடன் ஆவணங்களாக ஏற்பதற்கு தடை எதுவும் இல்லை. தொழில் வரி ரசீதுகள், வீட்டு வரி ரசீதுகள் வழக்கிற்கு பின்னிட்டவையாக உள்ள போதிலும் மேற்படி அடங்கல் பதிவேடு மற்றும் சிட்டா ஆவணங்கள் உட்பட மேற்கண்ட ரசீதுகளை அந்த ஆவணங்களின் தொடர்புடைமை மற்றும் நிரூபிக்கும் தன்மைக்கு உட்பட்டு குறியீடு செய்ய அனுமதிக்கலாம் என்று நீதியின் நலன் கருதி இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனு ஆவணங்களின் தொடர்புடைமை மற்றும் நிரூபிக்கும் தன்மைக்கு உட்பட்டு செலவு தொகையின்றி அனுமதித்து உத்திரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 10.01.2024 அன்று அவையறிய பகரப்பட்டது.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2024.01.10 18:38:29 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

**<u>பிற்சேர்க்கை:–</u>**

இல்லை.

S VADIVEL

Digitally signed by S VADIVEL
Date: 2024.01.10 18:38:37 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

இ.நி.ம.எண்.07/2023
இன்
அ.வ.எண்.124/2016
சீரான/வரைவு உத்தரவு
நாள்.10.01.2024.
மா.உ.நீ., அவிநாசி